# மார்ச் - 27 - திங்கள்

புனித கத்பேட்

கடவுளாகிய ஆண்டவரே, உம்மிடம் உதவி வேண்டினேன்: என்னை நீர் குணப்படுத்துவீர். திபா. 30:2

---

## முதல் வாசகம்: ஏசாயா 65:17 – 21

இதோ! புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன் முந்தியவை நினைத்துப் பார்க்கப்படுவதில்லை. மனத்தில் எழுதுவதுமில்லை. நான் படைப்பனவற்றில் நீங்கள் என்றென்றும் மகிழ்ந்து களிகூருங்கள். இதோ நான் எருசலேமை மகிழ்ச்சிக்குரியதாகவும் அதன் மக்களைப் பூரிப்பவர்களாகவும் படைக்கிறேன். நானும் எருசலேமை முன்னிட்டு மகிழ்ச்சியடைவேன் என் மக்களைக் குறித்துப் பூரிப்படைவேன் இனி அங்கே அழுகையும் கூக்குரலும் ஒருபோதும் கேட்கப்படா. இனி அங்கே நில நாள்களுக்குள் இறக்கும் பச்சிளங்குழந்தையே இராது. தம் வாழ்நாளை நிறைவு செய்யாத முதியவர் இரார். ஏனெனில், நூறாண்டு வாழ்ந்து இறப்பவனும் இளைஞனாகக் கருதப்படுவான். பாவியோ நூறு ஆண்டுகள் வாழ்ந்தும் சாபத்திற்கு உட்பட்டிருப்பான். அவர்கள் வீடு கட்டி அங்குக் குடியிருப்பார்கள் திராட்சை நட்டு அதன் கனிகளை உண்பார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மைப் புகழ்வேன் ஏனெனில் என்னைக் கை தூக்கிவிட்டீர்

## நற்செய்தி : யோவான் 4:43 - 54

அக்காலத்தில் இயேசு சமாரியாவிலிருந்து கலிலேயாவுக்குச் சென்றார். தம் சொந்த ஊரில் இறைவாக்கினருக்கு மதிப்பு இராது என்று அவரே கூறியிருந்தார். அவர் கலிலேயா வந்தபோது கலிலேயர் அவரை வரவேற்றனர். ஏனெனில் அவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது எருசலேமில் அவர் செய்தவை அனைத்தையும் கண்டிருந்தனர். கலிலேயாவில் உள்ள கானாவுக்கு இயேசு மீண்டும் சென்றார். அங்கே தான் அவர் தண்ணீரைத் திராட்சை இரசம் ஆக்கியிருந்தார். கப்பர்நாகுமில் அரச அலுவலரின் மகன் ஒருவன் நோயுற்றிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட அரச அலுவலர் அவரிடம் சென்று, சாகும் தறுவாயிலிருந்த தம் மகனை நலமாக்க வருமாறு வேண்டினார். இயேசு அவரை நோக்கி, "அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள். "என்றார். அரச அலுவலர் இயேசுவிடம், "ஐயா, என் மகன் இறக்குமுன் வாரும்" என்றார். இயேசு அவரிடம், "நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்" என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார். அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர்கொண்டுவந்து மகன் பிழைத்துக்கொண்டான் என்று கூறினார்கள். "எத்தனை மணிக்கு நோய் நீங்கியது?" என்று அவர் அவர்களிடம் வினவ, அவர்கள், "நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு காய்ச்சல் நீங்கியது" என்றார்கள். "உம் மகன் பிழைத்துக் கொள்வான்" என்று இயேசு அந்நேரத்தில்தான் கூறினார் என்பதை அவன் தந்தை நினைவுகூர்ந்தார். அவரும் அவர் வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபிறகு செய்த இரண்டாவது அரும் அடையாளம் இதுவே.

**தியானம் :** நம்பிக்கை என்பது எமது வாழ்க்கைக்கு முக்கியமானது என்பதனை இன்றைய வாசகமானது தெளிவுபடுத்தகின்றது. ஏனெனில் இயேசு ஒருவராலேயே அற்புதங்களையும், அருங்குறிகளையும் செய்ய முடியும் அவற்றை நாங்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு வாழவேண்டும். நாங்கள் நம்பிக்கை அற்றவர்களாக வாழ்வோமேயானால் வாழும் வாழ்வானது பொய்யாகிவிடும். அன்று கானாவூர் திருமண வீட்டில் இரசம் தீர்ந்துபோகவே அந்த நேரத்தில் அங்குறையை நீக்க தண்ணீரை இரசமாகமாற்றி நிறைவு படுத்துகின்றார். அதே போன்று அரச அலுவலகர் தனது மகன் சாகும் தருவாயில் இருக்கின்றார் அவரைக் குணப்படுத்தும்படி வேண்டுகின்றார். அவரும் அவர் மகனை குணப்படுத்துகின்றார். அவற்றைப் பார்க்கும் பொழுது ஒன்றை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. நாங்கள் நம்பிக்கையுடன் இறைவனிடம் வேண்டும் பொழுது எவ்வாறானவையாக இருந்தாலும் அவர் நிச்சயம் கொடுப்பார் என்பது தெளிவாகின்றது. ஆனால் இவ்வாறு எமக்கு பதில் தரும் இறைவனுக்கு நாங்கள் எந்த வகையில் நன்றி செலுத்தியிருக்கின்றோம். ஏனென்றால் எமக்கு துன்பம் வரும் பொழுது இறைவனைத்தேடி கோவில்களாகச் செல்கின்றோம், உபவாசம் இருக்கின்றோம் ஆனால் தேவைகள் நிறைவேறியவுடன் நன்றி கூறு மறந்த மீண்டும் ஏனோ தானோ என்று பழைய நிலைக்கு மாறிவிடுகின்றோம். அன்று பத்து தொழுநோயாளிகளை இயேசு குணப்படுத்தினார். ஆனால் அவருக்கு நன்றி சொல்ல வந்தது ஒருவர் மட்டும். எனவே தான் மற்றைய ஒன்பது பேர் எங்கே என்று அவர் கேட்கின்றார். எமது பிறப்பிலிருந்து இற்றைவரையுமாக இறைவன் பலவிதமான நன்மைகளை செய்திருக்கின்றார் எனவே மீண்டும் வந்து இயேசுவுக்கு நன்றி சொன்ன நோயாளியைப் போன்று எந்த வேளையிலும் எப்பொழுதும் நன்றி கூறுவோம். தேவையான நேரத்தில் அவர் யாவற்றையும் தருவார் என்று அவரில் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.